என் கண்கள் பூத்துப்போகிறது



Song 6 என் கண்கள் பூத்துப்போகிறது

119 சங்கீதம் - கப் (21-88)

Psalm 119:81-88 (Kaph) – Weary eyes, soul thirsting for salvation,
afflicted by enemies, yet faithful to God’s word. Pleads for revival and justice.

என் கண்கள் பூத்துப்போகிறது -கர்த்தாவே
உம்முடைய வாக்கின்மேல் நோக்கமானது
எப்பொழுது என்னைத் தேற்றுவீர் - ஆண்டவரே
உம் இரட்சிப்புக்கு என் ஆத்துமா தவிக்குது

புகையிலுள்ள துருத்தியைப் போலானேன்
உமது அடியேனுடைய நாட்கள் எம்மாத்திரம்?
என்னைத் துன்பப்படுத்தினவருக்கு எப்போது நியாயம் செய்வீர்?
உமது பிரமாணங்களையோ நான் மறவேன்

என் கண்கள் பூத்துப்போகிறது -கர்த்தாவே
உம்முடைய வாக்கின்மேல் நோக்கமானது
எப்பொழுது என்னைத் தேற்றுவீர் - ஆண்டவரே
உம் இரட்சிப்புக்கு என் ஆத்துமா தவிக்குது

அகங்காரிகள் எனக்கு குழிகளை வெட்டினர்
அநியாயமாய் என்னைத் துன்பப்படுத்தினர்
உம்முடைய கற்பனைகளெல்லாம் உண்மையாய் இருக்குதே
நீரே எனக்கு சகாயம் செய்யும்

என் கண்கள் பூத்துப்போகிறது -கர்த்தாவே
உம்முடைய வாக்கின்மேல் நோக்கமானது
எப்பொழுது என்னைத் தேற்றுவீர் - ஆண்டவரே
உம் இரட்சிப்புக்கு என் ஆத்துமா தவிக்குது

என்னை பூமியிலிராதபடி நீக்கிவிட யோசித்தனர்
ஆனாலும் நான் உமது கட்டளைகளை விடவில்லை
உமது கிருபையின்படியே என்னை உயிர்ப்பியும்
நான் உமது வாக்கின் சாட்சியைக் காத்து நடப்பேன்

என் கண்கள் பூத்துப்போகிறது -கர்த்தாவே
உம்முடைய வாக்கின்மேல் நோக்கமானது
எப்பொழுது என்னைத் தேற்றுவீர் - ஆண்டவரே
உம் இரட்சிப்புக்கு என் ஆத்துமா தவிக்குது



